மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : வழக்கு விவரம் எனக்குத் தெரியாது. கேட்டு வேண்டுமானால் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வழக்குக்குள்ளே போகக்கூடாது.

இராம நிர்வாகச் சீர்திருத்தம்.

*8195 திரு. எம். முத்தையன் : திரு. ஏ. செங்குட்டுவன் : திரு. ஆர். அண்ணா நம்பி ; திரு. பொன். விஜயராகவன் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழைய முறையில் கிராம (மணியம், கர்ணம் முறை) நிர்வாகத்தை சீர்திருத்தம் செய்யும் எண்ணம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் ; தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிராம நிருவாக அமைப்பை ஆய்வு செய்து, அதனைச் சீரமைப்பது பற்றி அரசுக்குப் பரிந்துரைகள் செய்ய, ஓய்வு பெற்ற இ.ஆ.ப. அலுவலர் திரு. லட்சுமிகாந்தன் பாரதி தலைமையில் ஒரு குழுவை அரசு நியமித்தது. மேற்படி குழு தனது அறிக்கையினை அரசுக்கு அளித்துள்ளது. அவ்வறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. எம். முத்தையன் : தலைவர் அவர்களே, பழைய மணியக்காரர்களில் வயதான முதியவர்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கு ஏதாவது பென்ஷன் கொடுத்து அரசு உதவக்கூடிய திட்டம் ஏதேனும் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : முத்தையனுக்கும் பென்ஷன் கொடுப்பதற்குப் பரிசீலிக்கலாம். (சிரிப்பு).

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கிற கிராம நிர்வாக அலுவலர்களை எந்தெந்த கிராமத்திற்கு போஸ்டிங் கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அந்தந்த கிராமத்திலேயே அவர்கள் குடியிருந்து பணியாற்றுவதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : அந்தந்த கிராமங்களில் உட்கார்ந்து பணியாற்ற வேண்டும் என்பதுதான் அவர்களுக்குரிய பொறுப்பு. அதை அவர்கள் ஒழுங்காக நிறைவேற்ற வேண்டும் என்பது அரசின் ஆசை.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்ணம்—இப்படி கிராம அதிகாரிகளாக இருந்தவர்களில் பெண்களும் இருக்கிறார்கள். மிகவும் வயதான காலத்தில் வறுமைவாய்ப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். எனக்கு ஓய்வூதியம் கொடுப்பதற்காக அல்ல; வயதான கிராம அதிகாரிகளுக்கு.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : பாப்பா உமாநாத் அம்மையார் அவர்களைப் பற்றி எனது கணிப்பு, அவருக்கு வயது அதிகமாகவில்லை. அந்தக் காரணத்தினாலேயே அவரைக் குமரிப்பெண் என்று அழைப்பதற்கும் நான் தயாராக இல்லை. (குறுக்கீடு) பாப்பா என்று அழைக்கலாம் என்று குமரி அனந்தன் யோசனை சொல்கிறார். அதை அவரே செய்யலாம். பொறுப்பை என்னிடம் தட்டிக் கழிக்கக் கூடாது. மற்றபடி அவர்களுக்கு உதவி செய்வதற்கு இந்த அரசு ஆவன செய்யும் என்ற உறுதிப்பாட்டை அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் பணி புரிந்த பழைய கிராம முன்சீப்,கர்ணம் போன்றவர்கள் 15 ஆயிரம் பேர் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்களை மீண்டும் வேலையிலே எடுப்பதற்கு லட்சுமிகாந்தன் பாரதி அறிக்கையில் கூட சொல்லப்பட்டிருக்கின்றது. அவர்களை எப்போது எடுப்பீர்கள், எத்தனை பேரை எடுத்துக் கொள்வீர்கள் என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : இதற்குத் தகுந்த பதிலைத் தரக்கூடியவர் நமது முதல்வர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, முதல்வரைப் பார்த்துக் கேட்க வேண்டிய கேள்வியாக இதை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. ப. முத்துசாமி : தலைவர் அவர்களே, பல்லாயிரக் கணக்கான கிராம கர்ணம், கிராம முன்சீப்கள் திடீரென்று ஒரே நாளில் வேலையிழந்து பல பேர் வசதியற்ற நிலையில் மிகவும் பரிதாபமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கருணை கொண்டு, நம்முடைய அரசு அவர்களுக்கு மீண்டும் வேலை கொடுப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1990 ஏப்ரல் 16

9–30 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: தலைவர் அவர்களே, ஒரே நாளில் தெரு ஓரத்திலே நிறுத்தியது யார் என்பதைப் பற்றி இப்போது நான் விளக்க விரும்பவில்லை. இந்த அரசைப் பொறுத்தவரை அனுதாபத்தோடு கவனிக்கும்.

திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கிராம நிர்வாக அலுவலர்களாகப் பணி யாற்றிக் கொண்டிருப்பவர்கள், பொதுமக்கள் ஏதாவது சான் றிதழ் அல்லது கோரிக்கை வைக்கச் சென்றாலும், அவர்களுக்கு எளிதாக அதை வழங்குவது இல்லை. அதைப்போலவே பொது மக்களிடத்திலே முறைகேடாகவும், அவர்களுடைய கடமை களைச் சரிவரச் செய்யாமலும் இருக்கிறார்கள். அத்தகைய கிராம நிர்வாக அலுவலர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : நிலைமைகளைத் தெரிந்து, கருத்துக்களை எடுத்துச் சொன்னதற்காக மாண்புமிகு உறுப்பினருக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பழைய கிராம அதிகாரிகளுக்கு ஏற்கெனவே கருணைத் தொகை–'கிராஜுவிட்டி'–கொடுக்கப்பட்டு விட்டது. பென்ஷன் கொடுக்கும் திட்டம் இல்லை. புதிய கிராம நிர்வாக அலுவலர்கள் முழு நேர அரசு ஊழியர்கள். அவர்களுக்கு பென்ஷன் நிச்சயமாகக் கிடைக்கும்.

போக்குவரத்துக் கழகப் பணிமனை.

*** 3025** திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரவக்குறிச்சியில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்துக்காக பணிமனை கட்டும் பணி எப்போது ஆரம்பிக்கப் படும்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் அரவக்குறிச்சி யில் இருந்து தற்சமயம் நான்கு நகர்ப்புற பேருந்துகளை மட்டுமே இயக்கி வருகிறது. அரவக்குறிச்சியிலிருந்து நகர்ப்புற பேருந்து களின் இயக்கமும், வழித் தடங்களும் அதிகரித்த பின்பே பணி மனை கட்டுவது பற்றி ஆராயக்கூடும்.